# திருக்குறளில் வரையறுக்கப்பட்ட தனிமனிதக் கட்டுப்பாடுகள்

முனைவர் ம.பிரேமா
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 002.
premasoosairaj@gmail.com

7

**ஆய்வுச்சுருக்கம்**

ஒழுக்கம் உடைமை,அடக்கமுடைமை,பொறையுடைமை,பண்புடைமை,மானம் என்ற அதிகாரங்களில் தனிமனிதக் கட்டுப்பாடுகளைப் பற்றி பேசும் வள்ளுவனின் வானுயர்ந்த சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய முனைகின்றது .

**முன்னுரை**

மனிதன் வாழ்க்கையில் தனக்கென்று கட்டுப்பாடுகளையும் வரையறைகளையும் வகுத்துக் கொண்டு வாழ்வது சாலச் சிறந்தது. ஆசைகள் விரிவடையும் நிலையில் அபரிமிதமான வளர்ச்சியை அடைய என்னும் நிலையில் புகழின் உச்சியில் நிலைபெற துணியும் பொழுதில் மனிதன் தனது கட்டுப்பாடுகளைத் ; தளர்த்திக் கொள்கிறான். அவ்வாறு கட்டுப்பாடுகளைத் தளர்த்திக் கொள்ளும் பொழுது மதிப்புறு தன்மையிலிருந்து மாறுபட நேரிடுகின்றது.அதனால் சமூகத்தின் முகம் சுளிக்கும் பார்வையிலிருந்து பிழைக்கவும், மனிதனாக தன்னை முத்திரைப் பதித்துக் கொள்ளவும் கட்டுப்பாடுகள் இன்றியமையாதது என்பதை வள்ளுவர் பல்வேறு அதிகாரங்களில்வலியுறுத்துகின்றார்.

**கலைச்சொற்கள்.**

1.தகவிலார் -துன்பம் தரும் சொற்களைப் பேசாதீர்கள்

2.இகழ்ந்து- ஏளனமாகப் பேசுவது

3.அறிவிலாரும் -தீமை செய்வோரும்

4. ஐந்தடக்கல்- புலன்களை அடக்கல்

**பண்பு**

பண்பு எனப்படுவது பிறருடைய இயல்புகளை அறிந்து நடத்தல். மனிதர்கள் அனைவரும் விரும்புவதும் ,மற்றவரிடம் இருந்து எதிர்பார்ப்பதும் மதித்தல் என்ற

நடத்தைப் பண்பாடு.ஆனால் இப்பண்பு மனிதர்களுக்கு மனிதர் மாறுபடுகின்றது.காலச்சூழல்,தேவைகள்,எதிர்பார்ப்புகள் என்ற காரணிகள் மனிதர்களிடையே தலைகீழ்விகிதத்தை ஏற்படுத்துவதை மனங்கள் தோறும் தேடிக் கண்டறிகிறான் வள்ளுவன் என்ற உளவியலாளன். இவனுக்கு உள்ளம் தெரிந்திருக்கின்றது. உள்ளத்தில் ஒளிந்திருக்கும் கள்ளமும் தெரிந்திருக்கின்றது.அதனால் தான் வள்ளுவனின் சினத்தை பாரதி இனியொரு விதி செய்வோம் அதை எந்நாளும் காப்போம் என்று தனது கவிதையில் பிரதிபலிக்கின்றார்

இளமையிலிருந்து பழக்கம் உடையவர்களாக இருப்பினும் விளையாட்டுக்காகக் கூட பிறரை இகழ்ந்து ஏளனமாகப் பேசுவது மன வருத்தத்தை தரும் என்று எச்சரிக்கின்றார் வள்ளுவன்.உலகத்தோடு ஒட்ட ஒழுகியவர்கள் மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று திறம் அறிந்தவர்களாக இருப்பர். அப்படிப்பட்டவர்கள் பகைவர்களைக் கூட ஏளனமாக பேசாத உயர்பண்புடையவர்களாக இருப்பர் என்று உறுதியாக உரைக்கின்றார்.ஏழு சீர்களில் நகைஇன்பம் ,நகை இன்னா ,பகைவரிடமும் வெளிப்படுத்தக்கூடாத நடத்தை என்று வையத்தில் வாழ்வோர்கெல்லாம் உரைத்துள்ளதை

**'நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு" (பண்புடைமை - 995)**

என்ற குறள் சுட்டுகின்றது.தக்கார் ,தகவிலார் என்று எவரிடத்தும் சிறிது மகிழ்ச்சிக்காகக்கூட துன்பம் தரும் சொற்களைப் பேசாதீர்கள் என்று கட்டளையிட்டு காலம் கடந்து வாழும் ஞானக்கடவுளாக என்றும் உள்ளத்தில் நிலைத்து வாழும் பெருந்தகையாளன் வள்ளுவர்.

அறிவிலாரும் தீமை செய்வோரும் வன்கொடுமைகளும் நிரம்பியிருக்கின்ற உலகம் எதனால் இயங்கிக் கொண்டிருக்கின்றது தெரியுமா ? என்று வினா எழுப்பி பண்புடையவர்கள் இருப்பதனால்தான் என விடையும் அளிக்கின்றார்.

**'பண்புடையார் பட்டுண்டு உலகம்அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்" (பண்புடைமை - 996)**

இக்குறளோடு ஔவையாரின்

**'நல்லார் ஒருவர் உளரேல் எல்லார்க்கும்**
**எல்லார்க்கும் பெய்யும் மழை" (மூதுரை – 10)**

என்ற கூற்றோடு பொருந்தி வருகின்றது.

**'உண்டால் அம்ம இவ்வுலகம்" (புறநானூறு - 182)**

என்னும் புறப்பாடலும்

**'பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" (நெய்தல்கலி - 16)**

என்று கலித்தொகையும் பண்புடைமையே உலகின் நிலைத்தன்மைக்கு அடிப்படை என்று தெளிவாகச் சுட்டுகின்றது.வள்ளுவன் தனது எழுத்தாணியின் கூர்முனை சிந்தனைகளை பக்குவமாகப் படைத்தளிக்கும் விதம் செவ்வித்து.பார் சிறக்க பாரிலுள்ளோர் நடக்க வேண்டிய முறைமையைச் சொல்லும் வள்ளுவன் இன்று வாமன அவதாரமெடுத்து நிற்கின்றான். மக்கள் என்றால் உருவ அமைப்பில் ஒத்திருத்தல் அன்று. நற்பண்பால் நிறைந்திருத்தல் என்ற அறிவுரை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொருந்தும்.ஒவ்வொரு தனிமனிதனும் தன்னால் உலகு இன்புற்று சுழல வேண்டும் என்ற ஆழ்மனத்தூண்டல் துலங்கலோடு இயங்கினால் செந்நாப்போதரின் சிந்தனை செழுமை பெறும் என்பது திண்ணம்.

**ஒழுக்கம்**

உலகளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளைப் பறைசாற்றும் எளிய நூலாக திருக்குறள்,ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்கள் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.இந்நூல்கள் அனைத்தும் பகுத்தறிவு உள்ள மனிதர்கள் ஒழுக்கம் என்ற பண்பாட்டில் உயர்ந்து நிற்றல் வேண்டும் என்ற நெறிமுறைகளைக் கற்பிக்கின்றது.

சமூகக் கட்டுப்பாடுகளை உருவாக்க நினைப்பவர்கள் தனது கட்டுப்பாட்டினை வீட்டில் இருந்து தொடங்குதல் சிறப்பினும் சிறப்பு.ஏனென்றால் தனிமனிதனின் கூட்டுச்சேர்க்கையே சமுதாயம்.சமுதாய ஒருங்கிணைப்பே நாடு. நாட்டிற்கு நன்மை செய்வது ஒவ்வொரு தனிமனிதனின் கடமை.அக்கடமையை செய்ய வேண்டுமெனில் ஒழுக்கத்தில் உயர்ந்திருத்தல் இன்றியமையாததாகும்.ஏனெனில் தனிநபர் ஒழுக்கமே நாட்டின் ஒழுக்கமாக மாறும்.ஆகையால் தான் உலக கட்டொழுங்கினை உருவாக்க நினைத்த வள்ளுவர் ஒழுக்கத்தின் நெறிகளைச் சொல்வதற்கு ஒழுக்கமுடைமை என்ற ஓர் அதிகாரத்தையே வகுத்திருப்பது சாலப் பொருத்தமுடையதாகும்.

**'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**
**எய்துவர் எய்தாப் பழி" (குறள் - 137)**

என்னும் குறள் ஒழுக்கத்தால் அடையும் மேன்மை , ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் பழி , ஒழுக்கத்தின் சிறப்பு முதலியவற்றைச் சுட்டுகின்றது.இதன் தொடர்ச்சியை வேதம் ஓதுவதை விட நன்று ஒழுக்கம் பேணுவது என்கிறது கொன்றைவேந்தன்.

**'ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்" (கொன்றைவேந்தன் -11)**

ஒழுக்கம் தவறாதவர்கள் பெறும் பேறாக நற்குடியில் பிறத்தல் ,நீண்டநாள் வாழ்க்கை,செல்வம்,உடலின் தோற்றப்பொலிவு , நிலஉரிமை, பாராட்டு, கல்விநலம், நோயின்மை ஆகியவற்றைப் பெறுவர் என்று ஆசாரக்கோவையும் அறிவுறுத்துகின்றது.

**'பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு**

**-------**

**ஒழுக்கம் பிழையாதவர்" (ஆசாரக்கோவை - 2)**

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் பெறும் என்பது ஆன்றோர் வாக்கு.ஒழுக்கம் என்பது மனித நடத்தை.ஒவ்வொரு மனிதனும் தலைசிறந்து வாழ முன்னோர்கள் வகுத்த நெறியே ஒழுக்கம். முன்னோர்கள் தங்கள் அனுபவங்கள் வழி கண்ட ஒழுக்க நெறிகளை நீதிநூலாக்கி உலகிற்கு உணர்த்தியுள்ளனர். 'ஆறுள் அடங்குங் குளமுள வீறுசால்"(51)என்று நான்மணிக்கடிகையில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்றொடர் நீர் மேலாண்மைத்திறத்தின் முதன்மையான வெளிப்பாடாக இருப்பது போல் மனிதனின் தலையாயப் பண்புகளில் முதன்மையாக இருக்க வேண்டியது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நற்பண்புகளின் சேர்க்கை. சமூகம் , நாடு, பெற்றோர்கள், உறவுகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் ,மற்றவர்கள் மீது கொள்ளும் அக்கறை ஆகிய அனைத்தும் ஒழுக்கத்தில் உள்ளடங்கும் என்பதை உணரமுடிகின்றது.

உலகில் மேன்மையுடன் வாழ வழிவகுக்கும் பண்பாடே ஒழுக்கம்.

**'ஒழுக்கம் விழுப்பம் தரும்" (குறள் - 131)**

**'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" (குறள்-138)**

என்ற வெண்பா அடிகள் ஒழுக்கத்தோடு கூடிய உயர்வே நிலைக்கும் என்பதற்கு சான்றாக அமைகின்றது.ஒருவரை வாழ்க்கையில் வழுக்கி விழாமல் தாங்கிப் பிடிக்கும் ஊன்றுகோலே ஒழுக்கம்.தனிநபர் ஒழுக்கமே நாட்டின் ஒழுக்கமாக மாறும்.

ஒருவன் வாழ்க்கையில் எத்துணை உயர்ந்த இடத்தில் இருப்பினும் அவனிடம் ஒழுக்கம் என்ற தகைமை இல்லையெனில் சமூகத்தில் அவனுக்கு செல்வாக்கு இருக்கலாம் ஆனால் மதிப்பு இருக்காது என்பதை உணர்த்தும்

**'ஒழுக்கம் இலான் உயர்வு" (குறள் - 135)**

என்னும் குறள் போற்றத்தக்கது.பொன்னை உரைத்துப் பார்க்க உதவும் உரைக்கல் போன்றது ஒருவனின் சிறப்பறியும் சீரிடமாக விளங்கும் ஒழுக்கம். ஒழுக்கநெறி

மேற்கொள்வதால் உடல் நலமும் உளநலமும் மேன்மையுறும்.இத்தகு இன்ப வாழ்வுக்கு வித்திடும் ஒழுக்கத்தை வருந்தியேனும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய திறத்தை,

**'பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம்" (குறள் - 132)**

என்று சொல்லும் வள்ளுவத்திற்கு நிகர் வேறெதுவும் இல்லை.இப்படி நயம்பட உரைப்பதே வள்ளுவனின் சொல்வன்மை.மக்கள் மெய்த்; தீண்டல் என்பது போல குறளை சுவைத்தால் மட்டுமே வாழ்வின் பொருளும் பொய்யிற்புலவனின் புலமையும் புலப்படும்.வள்ளுவன் வாழ்க்கைத்துணையாக மனிதன் கொள்ள வேண்டியது ஒழுக்கம் மட்டுமே என்று உரக்கச் சொல்கின்றார்.

**நாவடக்கம்**

பேசுவது ஓர் கலை. பேச்சாற்றலுக்குத் துணை நிற்பது நா.ஒருவரிடம் பேசுவதற்கு முன்பு சூழல் அறிந்து பேசுவதற்கு உகந்த சொற்களை ஆராய்ந்து பேசுவது கருத்துப் பரிமாற்றம் நிகழும் இருவருக்கும் இன்பம் பயக்கும். இளையோர் ஆயினும்,முதியோராயினும், உயர் பதவியில் இருப்பினும் , உலகையே ஆளும் அரசாக இருப்பினும், அறிவிலும் அனுபவத்திலும் சிறந்த பேச்சாளராக இருப்பினும் இடம்,பொருள் அறிந்து பேசவில்லை எனில் மதிப்புக் குறைவுறும். என்ற வள்ளுவரின் ஆழமான சிந்தனையில் மென்மை,மேன்மைப் பாங்கு ஏராளம்.

ஒருவருக்குப் பாதுகாப்பாக அமைவது அவர் சேர்த்து வைத்திருக்கும் பொன்னோ பொருளோ அல்ல.அவரது நாவடக்கமே.அதுவே அவருக்கு சமூகப் பாதுகாப்பும் நன்மதிப்பும் தரவல்லது.எனவே காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும்.அவ்வாறு காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர் என்று ஒவ்வொரு தனிமனிதனுக்குமுரிய மந்திரமாகப் பகர்கின்றார்.

**'யாகாவாராயினும் நா காக்க காவாக்கால் சோகாப்பர்**
**சொல் லிழுக்குப் பட்டு" (குறள் - 127)**

என்ற தந்திரத்தைப் பின்பற்றுதல் நலம்.பிறரை வாட்டும் கடுமையானச் சொற்கள் வாழ்நாள் முழுவதும் நெஞ்சை விட்டு அகலா நீண்ட துயர் தரும். அவ்வாறு பேசுகின்ற சமூகத்தின் அங்கமாகத் திகழ்கின்ற ஒவ்வொரு தனிமனிதனையும் பேசாதே என்று துணிந்து கடிந்துரைக்கின்றார்.சமூகத்தை தன் உறவாக, உயிராகக் கருதியதன் விளைவே

**'தீயினால் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு" (குறள் - 129)**

என்ற குறள்.

**மனஅடக்கம்**

**'ஒருமையுள் ஆமைப்போல் ஐந்தடக்கல் ஆற்றின்**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள் -126)**

ஆமை தன் புலன்களை வெளியில் தெரியாமல் மறைத்து வைத்திருப்பது போல் மனிதன் தன் புலன்களை அடக்கினால் பல பிறவிகளும் இன்பமாக இருக்கலாம் என்று மனஅடக்கம் பற்றி உரைக்கின்றார்.வள்ளுவனின் மனஅடக்கத்திற்குப் பாரதி

**'மானம் போற்று" (புதிய ஆத்திசூடி - 76)**

என்று புதிய வடிவம் கொணர்கின்றார்.

இல்லறச்செம்மை

நற்செயல்களின் வெளிப்பாட்டினையே வாழ்வின் ஒழுக்கமாக சமூகம் வரையறுத்திருக்கின்றது.நல்லறம் ஓம்பும் இல்லறத்தின் அச்சாணியாக அன்பும் ,அறமும் விளங்குகின்றது.இதனை வள்ளுவம்

**'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது" (குறள் -45)**

என்று குறிப்பிடுகின்றது.அன்பு , அறம் என்ற உறவுப் பிணைப்பின் அடிப்படையில் நடத்தும் இல்லறத்தில் முகிழ்த்த தனிமனித ஒழுக்கமே சமூக ஒழுக்கமாகி சீர் பெறுகின்றது என்றுரைக்கும் வள்ளுவன் உலகளாவியப் பார்வையில் உயர்ந்து நிற்கின்றான்.அணுவைத்துளைத்து ஏழ்கடலைப் புகட்டிய வள்ளுவன் என்று ஔவை சொன்னது மெய்யினும் மெய்யாகும்.

**நிதானம்**

மனிதன் தன்னால் சாதிக்க முடியும் என்பதனை நிதானித்துத் தெளிந்தால் துன்பங்களை எளிதாக வென்று விடும் வாய்ப்புக் கிட்டும்.அதுவே வெற்றிக்கு வழிவகுக்கும்.ஆகவே வாழ்வின் மூலதனமாக நிதானத்தைக் கருதுதல் வேண்டும் என்பதை

**'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல்" (குறள் -158)**

என்று கூறுகிறார். மனச்செருக்கால் தீமை செய்யக்கூடிய மக்கள் நிரம்பிய ஞாலத்தில் பொறுமை என்ற தகுதியை வளர்த்துக் கொண்டவர்கள் வெற்றியின் மணிமகுடத்தை தனதாக்கிக் கொள்வர் என்று மாற்றுச்சிந்தனையை விதைக்கும் வள்ளுவர் உலகத்தின் அச்சாணி என்றுரைத்தால் அது மிகையன்று.

**பணிவு**

பணிதல் எல்லார்க்கும் நன்றாம்.அவருள்ளும் செல்வம் உடையார்க் Nகு வேறொரு செல்வமாக இருக்க வேண்டியது பணிதல் என்ற பண்பாகும். அவ்வாறு இருப்பின் அவனது செல்வம் அவனை விட்டு நீங்காது.

**'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**

**செல்வர்க்கே செல்வம் தகைத்து' (குறள் - 125)**

என்னும் பேரூண்மையை மனித சமுதாயத்திற்கு உணர்த்திய அற்புதமான நூல் திருக்குறள்.பதவியும் பணமும்செல்வாக்கும் நிரம்பியவர்கள் அணிந்துகொள்ள வேண்டிய அணிகலனை இவ்வளவு நுணுக்கமாக எவராலும் சொல்ல இயலாது.

**நிறைவுரை**

சமுதாயத்தின் அங்கமாகத் திகழும் ஒவ்வொரு தனிநபரும் பேணவேண்டிய முறைமைப் பற்றி உரைக்கும் வள்ளுவர் அருகில் இருந்து உரைக்கும் நட்புடையார் போலவும்,படிப்பவர் மனதில் பசுமரத்தாணியாகப் பதியும் வண்ணம் உரைக்கும் ஆசிரியரைப் போலவும் ,நன்னெறிகளைப் போதிக்கும் ஞானக்கடவுளாகவும் ,தனிமனித கட்டுப்பாடுகளை அறிவுறுத்தும் பெற்றோராராகவும்,சமூகத்தினை நல்வழிப்படுத்தி நாட்டின் முன்னேற்றம் காணும் உயர்ப்பண்பாளனாகவும் , கேட்போரை தன்வயப்படுத்தும் நுட்பமானச் சொல்லாடல்களை எளிமையாக உரைக்கும் தத்துவஞானியாவும் திகழ்கின்றார். அவர் சமகால மனிதர்கள் ,அடுத்த தலைமுறைகள் என்ற பரந்துப்பட்ட கண்ணோட்டமுடைய தமிழ்சித்தர்.

தனிமனிதனிடமிருந்து மாற்றத்தைத் தொடங்குகின்றார்.அதன் எல்லையை சமூகம்,நாடு,உலகம் என்று விரித்துச் செல்கின்றார். அவரதுப் பார்வையில் உடைமைகளாக விளங்கும் பண்பு ,பொறுமை,ஒழுக்கம்,மானம்,அடக்கம், மனத்தூய்மை என்ற கட்டுப்பாடுகள் எல்லாக் காலத்தும் எல்லா மனிதருக்கும் பொருந்தி வரும் என்பதே ஆய்வில் கண்டறிந்த முடிவுகள்.

தனிமனித கட்டுப்பாடுகளை அனைவரும் பின்பற்றி வளர்ந்து நாமும் வாழ்ந்து

நாட்டினையும் உயர்த்தி வள்ளுவப் பிள்ளைகளாக மாறுவோம்.ஈரடி வெண்பாவை இரு கண்களாக கருதுவோம்.குமரியில் நிற்கும் வள்ளுவனை வணங்குவோம்.

**பார்வை நூல்கள்**


1.வள்ளுவமும் வரலாறும் - அ.இராமசாமி

2.வள்ளுவர் கூறும் வாழ்க்கை நெறிமுறைகள் - ஈ.சாந்திமங்கலம் முருகேசன்

3.பார்போற்றும் வள்ளுவமும் பண்புசால் வாழ்க்கையும் - ஈ.சாந்திமங்கலம் முருகேசன்4

4. சா.கிருட்டிணமூர்த்தி - இக்கால உலகிற்குத் திருக்குறள்

5. மு.சதாசிவம் - வள்ளுவர் உள்ளமும் வாழ்க்கைத்தத்துவங்களும்